**எல்லாக் கேள்விகளுக்கும் விடையளித்திடுக**

1 படம், ஒரு வரலாற்று அறிஞரைக் காட்டுகிறது.



படத்தில் காணப்படும் வரலாற்று அறிஞரின் பெயர் என்ன?

A இ.எச்.கார்

B இப்னு கல்டுன்

C ஹெரோடொட்டுஸ்

D டான் ஸ்ரீ டாக்டர் கூ கேய் கிம்

2 பின்வரும் தகவல் ஒரு வரலாற்று அறிஞரின் கூற்றாகும்.

| |
|---|
| வரலாறு என்பது தற்காலத்திற்கும் கடந்த காலத்திற்கும் இடையிலான தொடர்புச் செயற்பாங்காகும். |

மேலுள்ள தகவலுக்கு ஏற்ற பொருளைத் தெரிவு செய்க.

A வரலாறு என்பது ஒரு கதை

B வரலாறு என்பது உண்மைகள் மட்டுமே

C வரலாறு என்பது படிப்பினைக்காக மட்டுமே

D வரலாறு என்பது மாற்றத்தைக் குறிக்கின்றது

3 கொடுக்கப்பட்டுள்ள படம் ஒரு மலேசியரின் அடையாள ஆவணத்தைக் காட்டுகிறது.



மேற்கண்ட ஆவணத்தில் காணப்படும் விவரத்தைத் தெரிவு செய்க.

A பிறந்த திகதி

B பிடித்த உணவு



LIVEWORKSHEETS

C தேர்வின் முடிவு

D தொலைபேசி எண்

4 குடும்பத்தின் தந்தையின் பங்கு என்ன?

A விளையாடும் நண்பனாக இருத்தல்

B நாட்டின் நிதிநிலைமையை நிர்வகித்தல்

C பிள்ளைகளின் வீட்டுப்பாடத்தைச் செய்தல்

D குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

5 குடும்பத்தில் அண்ணன் மற்றும் அக்காளின் பங்கு ஏன் அவசியமாகிறது?

I மகிழ்ச்சியை நிலைநாட்ட

II கருத்துகளைத் தெரிவிக்க

III தம்பி தங்கைகளுக்கு வழிகாட்ட

IV குடும்பத்தில் ஒற்றுமையை வலுப்படுத்த

A I மற்றும் II

B I மற்றும் IV

C II மற்றும் III

D III மற்றும் IV

6 பின்வரும் தகவல் பள்ளியின் நிர்வாக அமைப்புமுறையைக் குறிக்கின்றது.




X எனும் குறியீடு யாரைக் குறிக்கின்றது?

A பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர்

B துணைத்தலைமையாசிரியர்

C நூலகப் பொறுப்பாசிரியர்

D தலைமையாசிரியர்

7 உன் வசிப்பிடத்தை நீ எவ்வாறு பேணிப் பாதுகாப்பாய்?

A வீட்டின் தூய்மையைப் பேணுதல்

B விளையாட்டுப் பூங்காவில் விளையாடுதல்

C தினமும் கூட்டுப்பணியை மேற்கொள்தல்

D வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்குதல்



LIVEWORKSHEETS

8 வசிப்பிடத்தை மதித்துப் போற்றும் ஒரு நடவடிக்கையைத் தெரிவு செய்க.

A சுற்றுப்புறத் தூய்மையைப் பேணுதல்

B பேருந்து நிலையத்தைச் சேதப்படுத்துதல்

C சுற்று வட்டாரத்தில் உள்ள மரங்களை வெட்டுதல்

D அனுமதியின்றி அதிக கட்டடங்களை நிர்மாணித்தல்

9 உறைபனி யுகம் என்பதன் பொருள் என்ன?

A பூமியில் அதிக பனிப்பறைகள் உருவாகிய காலம்

B பூமி அதிக வெப்பநிலையைக் கொண்டிருந்த காலம்

C பூமியை அடர்ந்த பனிக்கட்டிகள் சூழ்ந்திருந்த காலம்

D பூமி மிதமான வெப்ப நிலையைக் கொண்டிருந்த காலம்

10 வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பதன் பொருள் என்ன?

A மனிதர்கள் தோன்றிராத காலம்

B அரசாங்கம் உருவாகிடாத காலம்

C மனிதர்கள் எழுத்தை அறிந்திராத காலம்

D நவீன தொழில்நுட்பங்கள் உருவாகிய காலம்

படம், வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மனிதர்களின் நடவடிக்கைகளைக் காட்டுகிறது.



11 மேற்கண்ட படம் எந்த காலத்தைக் குறிக்கின்றது?

A புதிய கற்காலம்

B உலோகக் காலம்

C பழைய கற்காலம்

D இடைக் கற்காலம்

12 வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்கள் எந்தக் காலத்தில் நெருப்பைத் திறம்பட பயன்படுத்தினர்?

A புதிய கற்காலம்



LIVEWORKSHEETS

B உலோகக் காலம்

C பழைய கற்காலம்

D இடைக் கற்காலம்

பின்வரும் தகவல் பண்டைய மலாய் அரசுகளின் அரசதந்திர உறவைக் காட்டுகிறது.




13 M எந்த நாட்டைக் குறிக்கின்றது?

A சீனா

B மஜாபாஹிட்

C சன்துபோங்

D கெடா துவா

கொடுக்கப்பட்டுள்ள படம், மலாக்கா மன்னராட்சிக் காலச் சமூகக் கட்டமைப்பைக் காட்டுகின்றது.




14 Y எந்த தரப்பினரைக் காட்டுகிறது?

A பெருந்தலைவர்கள்

B அடிமைகள்

C குடிமக்கள்

D சுல்தான்

15 மலாக்கா மலாய் மன்னராட்சியில் நாம் கடைப்பிடிக்கக் கூடிய இணையற்ற தலைவர்களின் தன்மைகளைத் தெரிவு செய்க.

I கடின உழைப்பு

II அரசாங்கத்தை எதிர்த்தல்

III சுயநலமாகச் செயல்படுதல்

IV நாட்டிற்காகத் தியாகம் செய்தல்

A I மற்றும் II

B I மற்றும் IV

C II மற்றும் III

D III மற்றும் IV

16 எந்த விலங்கு பரமேஸ்வராவின் வேட்டை நாயை உதைத்துத் தள்ளியது?



LIVEWORKSHEETS

A மான்

B முயல்

C உடும்பு

D சிறுத்தை

பின்வரும் படம், போரின் போது துன் பேராக் பயன்படுத்திய தீப்பந்தத்தைக் காட்டுகிறது.



17 துன் பேராக் தீப்பந்தத்தைப் பயன்படுத்தியதன் காரணம் என்ன?

A மலாக்காவை ஒளிமயமாக்க

B போர் வீரர்களை மகிழ்விக்க

C சயாமியப் படையினரை ஏமாற்ற

D போர் வீரர்களை உற்சாகப்படுத்த

கொடுக்கப்பட்டுள்ள தகவல் துன் பேராக்கின் அரசதந்திர உறவில் அறிவாற்றலைக் காட்டுகிறது.

| துன் பேராக் சயாமிய அரசுக்கு கடிதம் எழுதினார். |
|---|

18 துன் பேராக் சயாமிய அரசுக்குக் கடிதம் எழுதியதன் நோக்கம் என்ன?

A மன்னிப்புக் கேட்க

B நட்புறவை வளர்க்க

C போருக்கு அழைக்க

D இஸ்லாமிய நெறியைப் பரப்ப

19 ஹங் துவாவின் நண்பர்களைத் தெரிவு செய்க.

I ஹங் மாமுட்

II ஹங் லெக்யூ

III ஹங் லெக்கிர்

IV துன் பெர்பாத்தே

A I மற்றும் II



LIVEWORKSHEETS

B I மற்றும் IV

C II மற்றும் III

D III மற்றும் IV

20 ஹங் துவா ஏன் மலாக்காவின் கடற்பகுதியில் பொறுப்பு வகித்தார்?

A வாணிபர்களின் பொருள்களைப் பாதுகாக்க

B வியாபார பொருள்களின் விலையை நிர்ணயிக்க

C கடற்பகுதி பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய

D சட்டதிட்டங்கள் முறையாகக் கடைப்பிடிப்பதை உறுதி செய்ய

**_Bahagian B_ / பிரிவு B**

**எல்லாக் கேள்விகளுக்கும் விடையளித்திடுக**

1. படங்களைப் பொருத்தமான மூலத்தின் பெயருடன் இணைத்திடுக.

| மூலம் | | | மூலத்தின் பெயர் |
|---|---|---|---|
|   | • | • | தொல்பொருள் |
|   | • | • | கையெழுத்துப் படிவம் |
|  | • | • | நூல் |
|  | • | • | புதைபடிவம் |
|  | • | • | நாளிதழ் |



LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS